






முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.6.2025) சென்னை வர்த்தக மையத்தில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் சார்பில் நடைபெற்ற உலக சுற்றுச்சூழல் தின விழாவில், 1400 வனக் காவலர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கினார். இந்நிகழ்வின்போது, நிதி, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, , குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், வனத்துறை மற்றும் காதி அமைச்சர் ஆர். எஸ். ராஜகண்ணப்பன், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை இயக்குநர் ஆ.ர. ராகுல் நாத் முதன்மைத் தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வனத்துறை தலைவர் ஸ்ரீனிவாஸ் ரெட்டி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரின காப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத் தலைவர் முனைவர் எம்.ஜெயந்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.6.2025) சென்னை வர்த்தக மையத்தில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் சார்பில் நடைபெற்ற உலக சுற்றுச்சூழல் தின விழாவில், மாவட்டத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக சிறப்பாக செயலாற்றியதற்காக திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.பிரதாப் அவர்களுக்கு பசுமை விருது வழங்கினார். இந்நிகழ்வின்போது, நிதி, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், வனத்துறை மற்றும் காதி அமைச்சர் ஆர். எஸ். ராஜகண்ணப்பன், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை இயக்குநர் ஆ.ர. ராகுல் நாத், முதன்மைத் தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வனத்துறை தலைவர் ஸ்ரீனிவாஸ் ரெட்டி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரின காப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத் தலைவர் முனைவர் எம். ஜெயந்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.6.2025) சென்னை வர்த்தக மையத்தில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் சார்பில் நடைபெற்ற உலக சுற்றுச்சூழல் தின விழாவில், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நீர் நிலைப்பாதுகாப்பில் சிறப்பாக செயல்பட்ட 38 நபர்களுக்கு முதலமைச்சரின் நீர்நிலைப் பாதுகாவலர் விருதுகள் மற்றும் தலா 1 இலட்சம் ரூபாய்க்கான பரிசுத்தொகையையும் வழங்கினார். இந்நிகழ்வின்போது, நிதி, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், வனத்துறை மற்றும் காதி அமைச்சர் ஆர். எஸ். ராஜகண்ணப்பன், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை இயக்குநர் ஆ.ர. ராகுல் நாத் முதன்மைத் தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வனத்துறை தலைவர் ஸ்ரீனிவாஸ் ரெட்டி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரின காப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத் தலைவர் முனைவர் எம். ஜெயந்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### நாட்டுப்பற்றிலும் – மொழிப் பற்றிலும்

# எஃகு போன்ற உறுதி காட்டியவர், கண்ணியத் தென்றல் காயிதே மில்லத்!

## வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, ஜூன் 6–

கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களின் 130வது பிறந்தநாளை யொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:–

**எவரும் குறைகாண முடியாத அப்பழுக்கற்ற வாழ்க்கைக்குச் சொந்தக்காரர் இஸ்லாமிய சமூகத்தின் இணையற்ற தலைவர், தந்தை பெரியாரால் அரிய தலைவர் எனப் போற்றப்பட்டவர், தலைவர் கலைஞரின் மீது அன்பைப் பொழிந்தவர் 1967இல் கழகம் ஆட்சியமைக்கத் துணைநின்றவர், நாட்டுப்பற்றிலும் மொழிப்பற்றிலும் எஃகு போன்ற உறுதியைக் காட்டிய கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்களின் பிறந்தநாள்!**

**காயிதே மில்லத் அவர்கள் பிறந்த திருநெல்வேலி மாவட்டத்தில் அமையவுள்ள மாபெரும் நூலகத்துக்கு அவரின் பெயர் சூட்டப்படும் என அறிவித்த மனநிறைவோடு அவரது நினைவிடத்தில் மரியாதை செலுத்தினேன்.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### அரசு உறைவிடப் பள்ளி மாணவி

# ராஜேஷ்வரியின் உயர்கல்விச் செலவு முழுவதையும் தமிழ்நாடு அரசே ஏற்கும்!

## மாணவியின் சாதனையைப் பாராட்டி - முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 6–

அரசு உறைவிடப் பள்ளியில் படித்து ஐ.ஐ.டி. சேருவதற்கான சாதனை படைத்த மாணவியின் உயர்கல்விச் செலவை அரசே ஏற்கும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

அரசு உறைவிடப் பள்ளி மாணவி ராஜேஷ்வரியின் சாதனை குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:–



**தந்தையை இழந்தாலும், அவர் கனவைத் தன் நெஞ்சில் சுமந்து நனவாக்கியிருக்கும் அரசு உறைவிடப் பள்ளி மாணவி ராஜேஷ்வரியின் சாதனைக்கு என் Salute!**

**அவரது உயர்கல்விச் செலவு மொத்தத்தையும் அரசே ஏற்கும் என மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன்.**

**ராஜேஷ்வரி போன்ற நமது மகள்கள் மேலும் பலர் சேருவதுதான் IITக்கு உண்மையான பெருமையாக அமையும்! அதற்காக நமது திராவிட மாடல் அரசு தொடர்ந்து உழைக்கும்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளையொட்டி- கண் சிகிச்சை நிபுணர் மருத்துவர் சுரேந்தர்

# சங்கர நேத்ராலயா மருத்துவமனையில் இருவருக்கு இலவச கண் சிகிச்சை!

சென்னை, ஜூன் 6 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 -வது பிறந்த தினத்தை முன்னிட்டு 3.6.2025 அன்று சங்கர நேத்ராலயா மருத்துவர் சுரேந்தர் ஏழை எளியோர் இருவருக்கு இலவச கண் சிகிச்சைசெய்துள்ளார்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த தினமான ஜூன் 3 ஆம் தேதி அன்று ஒவ்வொரு ஆண்டும் ஏழை எளியோர் இருவருக்கு சங்கர நேத்ராலயா மருத்துவமனையில் கண் மருத்துவர் சுரேந்தர் இலவச கண் சிகிச்சை செய்து வருகிறார்.

அதேபோன்று இந்த ஆண்டும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102-வது பிறந்த தினத்தை முன்னிட்டு 3.6.2025 அன்று நுங்கம்பாக்கம் சங்கர நேத்ராலயா மருத்துவமனையில் பிரபல கண் மருத்துவர் சுரேந்தர் இரண்டு எழை எளியோருக்கு இலவசமாக கண் சிகிச்சை செய்துள்ளார்.

கண் சிகிச்சை மேற்கொண்ட இருவரும் மருத்துவர் சுரேந்தருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.



காஞ்சிபுரத்தில் காந்தி ரோடு பெரியார் தூண் அருகில் கழக வர்த்தக அணி சார்பில் வி.எஸ்.ராமகிருஷ்ணன் ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளையொட்டி நீர் மோர். அறுசுவை உணவை.மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்எல்ஏ வழங்கினார். சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி..எழிலரசன், மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், மேயர் மகாலட்சுமி யுவராஜ், மாமன்ற உறுப்பினர் திருமதி. மல்லிகா ராமகிருஷ்ணன், மாநகர வர்த்தக அணி அமைப்பாளர் பிரஸ் ரவி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# எதையும் எதிர்கொள்ளும் வலிமை கொண்டது ‘திராவிட மாடல்’!

# சேப்பாக்கம் திருவல்லிக்கேணியில் மாணவர் வாசகர் சந்திப்பு!

சென்னை, ஜூன் 6 -

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டையொட்டி கழக இளைஞர் அணி சார்பில் தமிழ்நாடு முழுவதும் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் ‘கலைஞர் நூலகம்’ அமைக்கப்பட்டு வருகிறது. இதுவரை 100 கலைஞர் நூலகங்கள் திறக்கப்பட்டு, பள்ளிக் குழந்தைகள் முதல் போட்டித்தேர்வுகளுக்கு தயாராகும் மாணவர்கள் வரை பலருக்கும் பயனுள்ள வகையில் செயல்பட்டு வருகின்றன.

இதில் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தில், கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், கலைஞர் நூலக மாணவர் வாசகர் சந்திப்பு, வட்டவாரியாக நடைபெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக 04.06.2025 அன்று 119வது வட்டத்திற்கான மாணவர் வாசகர் சந்திப்பு, சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பாக நடைபெற்றது.



கழக இளம் பேச்சாளர் மு.ரோஜா அவர்கள் கலந்து கொண்டு, நமது திராவிட மாடல் அரசு கல்விக்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் கொடுக்கும் முக்கியத்துவம், அதனால் தமிழ்நாடு அடைந்த மாற்றங்கள் குறித்துப் பேசினார். “இயற்கைப் பேரிடராக இருந்தாலும், ஒன்றிய அரசின் திட்டப் (செயற்கை) பேரிடராக இருந்தாலும் சரி, தமிழ்நாடு எப்பொழுதும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையில் சிறந்து விளங்குகிறது. இந்தித் திணிப்பு, புதிய கல்விக் கொள்கை, விஸ்வகர்மா போன்ற செயற்கைப் பேரிடர்களில் சிக்கிக் கொண்ட வடமாநில இளைஞர்கள் புலம்பெயர் தொழிலாளர்களாகவும், தினக் கூலிகளாகவும் பல மாநிலங்களில் பணியாற்றி வருகிறார்கள். அதேவேளையில் நம்முடைய இளைஞர்கள் பன்னாட்டு நிறுவனங்களில் உயர் பதவியில் பணியமர்த்தப் படுகிறார்கள். அதற்கு மிக முக்கியக் காரணமாய் விளங்குகிறார் நமது திராவிட மாடல் முதல்வர்” என்று மாணவர்களிடம் எடுத்துரைத்தார்.

வருகை தந்த மாணவர்களுக்கு நிகழ்ச்சியின் நிறைவில், முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் வெளியீடான ‘திராவிட மாடல் அரசு’, ‘டாக்டர் கலைஞர்’ நூல்கள் வழங்கப்பட்டன.

சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் ப.பிரகாஷ், துணை அமைப்பாளர் வி.தினேஷ் குமார், திருவல்லிக்கேணி பகுதி துணை அமைப்பாளர்கள் கு.வெங்கடேஷ், புருஷோத்தமன், ஆர்.விக்னேஷ், செ.சதீஷ்குமார் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.